1970 செப்டம்பர் 3]

*215. வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்காக அரசு துவக்கிய வலவர் பயிற்சிப் பள்ளியில் (Driving school) இதுவரை எத்தனைப் பேர் பயிற்சிப் பெற்றுள்ளனர்?

(இ) அவர்களுள் எத்தனைப் பேருக்கு வேலை தரப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பயிற்சி திறம்பட முடித்த வர்களின் விவரம் பின்வருமாறு (31—5—1970 அன்றுள்ளபடி) :

(அ) குறைந்த பார வண்டிகள்—487.
அதிக பார வண்டிகள்—7.

(இ) பயிற்சி பெற்ற நபர்கள் எங்கே வேலை செய்கிறார்கள் என்ற விவரம் இல்லை.

திரு. பி. எம். முனுசாமி கவுண்டர் : அந்தப் பயிற்சிப் பள்ளி தமிழகத்தில் எத்தனை இருக்கின்றன? அவர்களுக்கு எந்த எந்த முறையில் பயிற்சி அளிக்க வேண்டும் என்கிற வரையறை இருக்கிறதா? அதிகமாக ஆக்சிடெண்டுகள் ஆகின்றனவே, அதைத் தவிர்க்க நிரந்தரப் பயிற்சி அளிக்கப்படுகிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பர்மா அகதிகளைப் பற்றியது. அவர்களுடைய பயிற்சிப் பள்ளி சம்பந்தப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பர்மா அகதிகளுக்குப் பயிற்சிப்பள்ளி ஒன்று திருச்சியிலும், ஒன்று கோயம்பத்தூரிலும் இருக்கிறது. Training Course in light duty vehicle. என்பதாக 60 நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. மொத்த இடங்கள் 100. அவர்களுக்கு இருக்கிற யோக்கியதாம்சங்கள் not less than 18 years and not more than 35 years at the time of selection. உயரம் 5 அடி 3 அங்குலம் இருக்கவேண்டும். எடை 105 ராத்தல். எஜுகேஷனல் க்வாலிபிகேஷன் தமிழ் படிக்க எழுதத் தெரிந்தால் போதும். They must possess clear eye-sight free from night blindness and colour blindness. இன்னொரு பயிற்சிப்பள்ளி போக்குவரத்துத் துறையில் நடத்தப்படுகிறது Training Course in light duty vehicle இது பயிற்சி காலம் ஒரு மாதம் உடையது. 60 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, பர்மாவில் இருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு வேறு எந்த எந்தத் துறையில் பயிற்சி அளிக்கும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது? எந்த எந்தத் துறையில் வேலை வாய்ப்பு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வேறு துறைகளிலும் பயிற்சி அளித்து வருகிறது. இன்னும் எந்த எந்தத் துறைகளில் வேலை வாய்ப்பை அளிக்கலாம் என்பதும் பரிசிலிக்கப்படும்.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது . பேரவைத் தலைவர் அவர்களே, பர்மாவிலிருந்து வந்திருக்கிற அகதிகளுக்கு டிரைவிங் பயிற்சி 60 நாட்களுக்கு நடைபெறுகின்றது. 60 நாட்கள் அவர்களுக்குக்

கொடுக்கிற வலவர் பயிற்சியோடு, மெக்கானிக் பயிற்சியையும் சேர்த்து கால அளவைக் கூட்டி, பயிற்சி கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? இப்போது திருச்சியிலும், சென்னையிலும்தான் இந்தப் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் தான் அதிகமான அளவில் பர்மா அகதிகள் இருக்கிற காரணத்தினால் திருநெல்வேலியிலும் இப்படிப்பட்ட ஒரு பள்ளியை அரசாங்கம் அமைக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அதிலே பயிற்சி பெற்றவர்கள் எங்கெங்கே வேலையில் இருக்கிறார்கள் என்ற கணக்கு இல்லை.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு வீட்டு வசதி

*216. வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கையில் இருந்து வரும் அகதிகளுக்காக "வியாசர்பாடியில்" வீடுகள் கட்ட தமிழக அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) & (இ) இலங்கையில் இருந்து வரும் அகதிகளுக்காக "வியாசர்பாடியில்" வீடு கட்ட தமிழக அரசுக்கு உத்தேசம் இல்லை. பர்மா அகதிகளுக்குத்தான் இருக்கிறது. எனவே இவ்வினா எழாது.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அவர்களுக்காக எவ்வளவு வீடுகள் கட்ட உத்தேசம்? அதற்காக எவ்வளவு தொகை மாநில அரசும், மத்திய அரசும் கொடுக்கவிருக்கிறது? மத்திய அரசிடமிருந்து எவ்வளவு தொகை கேட்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அம்மையார் தொகுதியான வியாசர்பாடியில் அவர்களாக வீடுகள் கட்டிக்கொண்டார்கள். பல வசதிக் குறைவான இடத்தில் 2,500 பர்மா அகதிக் குடும்பங்கள் எந்த விதமான அடிப்படை வசதிகளும் இல்லாத அளவில் அவர்களுக்கு பலன் அளிக்கின்ற வகையில் போதிய பாதைகள், விளக்குகள் சாதாரண சுகாதார ஏற்பாடுகள் செய்வதற்கு தமிழ்நாடு அரசாங்கம் 3 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டம் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அதோடு கூட ரூபாய் 24 லட்சம் சாதாரண சுகாதார வசதியையும் (பேசிக் அமெனிடிஸ்) செய்வதற்கு திட்டம் தயாரித்து அனுப்பி இருக்கிறது. அந்த 3 கோடி ரூபாயில் 50 சதவிகிதம் ரூபாய் மானியமாகவும், 50 கோடி ரூபாய் கடனாகவும் அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இது மத்திய அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ம. பொ. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, பர்மாவிலிருந்து அகதிகளாக வருகின்ற தமிழ் குடும்பங்களுக்கு சென்னை மாநகரத்தில் இடவசதி இல்லை என்பதன் காரணமாக அவர்களைத் தாளவாடி, ஒதூர் பகுதியில் குடியேற்ற அரசு ஆலோசிக்குமா?